முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

60 T I

# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020
# First Term Test - Grade 10 - 2020

பெயர் : .....................................  நேரம் : 03 மணி. 10 நிமி.

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - I

**கவனிக்க :**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இலக்கம் 01 - 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1, 2, 3, 4 எனும் விடைகளுள் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையினைக் குறிக்கும் இலக்கமுடைய வட்டத்திற்குள் (X) அடையாளமிடுக.

01. பின்வருவனவற்றுள் மனித தேவைகளை மாத்திரம் கொண்ட விடைத்தொகுதி எது?
(i) உணவு, கல்வி, பேருந்து
(ii) சுகாதாரம், வசிப்பிடம், இணையம்
(iii) தொடர்பாடல், உணவு, வசிப்பிடம்
(iv) உணவு, வசிப்பிடம், சீருடை

02. கீழே நிரல் A இல் விருப்பங்களும், நிரல் B இல் தேவைகளும் தரப்பட்டுள்ளன. அவற்றை பொருத்தமாக இணைக்கும் போது கிடைக்கும் ஒழுங்கு வரிசை

| நிரல் A | நிரல் B |
|---|---|
| (i) CCTV கமரா | A - சுகாதாரம் |
| (ii) சுவசரிய மருத்துவ அவசர ஊர்தி | B - பாதுகாப்பு |
| (iii) புத்தகங்கள் | C- தொடர்பாடல் |
| (iv) கையடக்கத் தொலைபேசி | D - கல்வி |

03. மருத்துவம் ஒரு A ................ ஆவதுடன் வைத்தியரினால் பயன்படுத்தப்படும் உடல் ஒலிபெருக்கிக் கருவி B .............................. ஆகும்.
மேலே A மற்றும் B ஆகிய இடைவெளிக்குப் பொருத்தமான சொற்பதங்களை முறையே தெரிவு செய்க
(i) சேவை, பொருள்  (ii) தேவை, விருப்பம்
(iii) பொருள், சேவை  (iv) விருப்பம், பொருள்

04. பின்வருவனவற்றுள் பொருள் உற்பத்தி வணிகமாக அமைவது,
(i) காப்புறுதி நிறுவனம்  (ii) தனியார் வைத்தியசாலை
(iii) அழகுக்கலை நிறுவனம்  (iv) கதிரை உற்பத்தி நிறுவனம்

05. நிலம் எனும் உற்பத்திக் காரணிக்கான உதாரணமாக அமைவது,
(i) காட்டு வளம், மண்
(ii) காட்டு வளம், பட்டைத் தீட்டப்பட்ட இரத்தினக்கல்
(iii) மண், கட்டடம்
(iv) கனிய எண்ணெய், பணம்


kalvi.lk

06. பின்வருவனவற்றுள் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(i) பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் நிறுவனங்கள் வணிகமாகும்.
(ii) எல்லா வணிகங்களினதும் பிரதான நோக்கம் இலாபம் உழைப்பதாகும்.
(iii) தேவைகளை பூர்த்தி செய்யும் வழிமுறைகள் விருப்பங்கள் எனப்படும்.
(iv) தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய பௌதீக தன்மை கொண்டவை பொருட்கள் ஆகும்.

07. பின்வரும் கட்சியினர்களுள் வணிகங்களுக்கு அவசியமான ஊக்குவிப்புக்களை வழங்குவது

(i) முகாமையாளர் (ii) வழங்குனர்
(iii) அரசு (iv) சமூகம்

08. வணிகமொன்றில் 01 .................... இட்ட முதலீட்டுக்கான பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்காக ஆர்வம் காட்டுவதுடன் 02 ...................... நியாயமான சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் வணிகங்கள் மீது அக்கறைக் காட்டுகின்றனர்.

மேலே 01, 02 ஆகிய இடைவெளிக்குப் பொருத்தமான சொற்பதங்களைத் தெரிவு செய்க.

(i) போட்டியாளர், ஊழியர் (ii) வழங்குனர், ஊழியர்
(iii) உரிமையாளர், வழங்குனர் iv) உரிமையாளர், ஊழியர்

**பின்வரும் சம்பவத்தை அடிப்படையாக் கொண்டு 9,10 மற்றும் 11 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

அமா தக்ஷரி என்பவர் " அமா புக் ஷொப் " எனும் பெயரில் எழுதுகருவி விற்பனை வணிகமொன்றை பாடசாலைக்கு அருகாமையில் நடாத்தி வருகிறார். இவ் வணிகத்தில் முகாமையாளர் ஒருவரும் ஊழியர்கள் இருவரும் பணி புரிந்து வருகின்றனர்.

09. " அமா புக் ஷொப் " வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் தரப்பினர்களில் ஒருவரான அமாவுடைய நோக்கங்களில் ஒன்றாக அமையாதது,

(i) போதியளவு இலாபத்தைப் பெற்றுக் கொள்ளல்.
(ii) தீர்மானமெடுத்தலும் தீர்மானங்களை அமுல்படுத்தலும்.
(iii) வணிகத்தின் எதிர்கால அபிவிருத்தி
(iv) முதலீட்டுக்கான பாதுகாப்பு

10. " அமா புக் ஷொப் " வணிகத்திற்கு பொருட்களை வழங்கல் செய்யும் " ரிசர்ட் " மொத்த வியாபாரத்தின் நோக்கமாக அமைவது,

(i) தமது உற்பத்திகளுக்கான விலையைத் தீர்மானித்தல்
(ii) உற்பத்திகளை நியாயமான விலையில பெற்றுக் கொள்ளல்
(iii) முறையாக பணத்தினை வசூலித்தல்
(iv) வழங்கிய கடனை மீளப் பெற்றுக் கொள்ளல்.

11. " அமா புக் ஷொப் " வணிகம் மீது அக்கறைக் காட்டும் தரப்பினர் அல்லாதது.

(i) அமா (ii) ஷெஹானி புக் ஷொப்
(iii) மக்கள் வங்கி (iv) சஹன் பால் விற்பனை நிலையம்


kalvi.lk

12. கீழே X நிரலில் வணிகம் மீது அக்கறைக் காட்டும் தரப்பினர்களும் Y நிரலில் அத்தரப்பினர்களிடமிருந்து வணிகங்கள் எதிர்பார்க்கும் பங்களிப்புக்களும் தரப்பட்டுள்ளன.

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| (i) உரிமையாளர் | A - உரிய நேரத்தில் மூலப் பொருட்களை வழங்கல் |
| (ii) முகாமையாளர் | B - உழைப்பின் வினைதிறனை அதிகரித்தல் |
| (iii) ஊழியர் | C - வணிக நடவடிக்கைகள் மீதான அக்கறையும் அர்ப்பணிப்பும் |
| (iv) வழங்குனர் | D- சரியான தீர்மானங்களை எடுத்தல் |

மேலே X நிரலையும் Y நிரலையும் இணைக்கும் போது கிடைக்கும் சரியான ஒழுங்குவரிசை

(i) C D B A (ii) D C B A (iii) C B D A (iv) C D A B

13. நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் உருவாக்கப்பட்ட சட்டத்தை தெரிவு செய்க.

(i) 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் அதிகாரச் சட்டம்

(ii) 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் அதிகாரச் சட்டம்

(iii) 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் தொடர்பான அதிகாரச் சட்டம்

(iv) 2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் அலுவல்கள் சட்டம்

14. வணிகச் சூழலுடன் தொடர்புடைய சில நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - உள்நாட்டு கிழங்கு வகைகளுக்கான வரி சீரமைப்பு தொடர்பில் இவ்வாண்டு அரச பாதீட்டுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

B - வங்கி வைப்பு வட்டி வீதம் 2% ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

C - சூழல் பாதுகாப்பு கருதி பொலித்தீன் பாவனை தொடர்பில் புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது

மேலுள்ள நிகழ்வுகளில் அரசியல் சூழலுடன் தொடர்புடைய நிகழ்வுகளை மாத்திரம் கொண்ட தொகுதி

(i) A மற்றும் B (ii) A மாத்திரம் (iii) A மற்றும் C (iv) C மாத்திரம்

15. பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க

(i) தமது திறமைகயையும் ஆளுமைகளையும் கொண்டு பணிகளை முறையாக நிறைவு செய்யும் நபர் முகாமையாளர் ஆவார்.

(ii) சர்வதேச தொடர்பு, வியாபார ஒப்பந்தம் என்பன அரசியல் சூழல் காரணிகளாகும்

(iii) அரச பாதீட்டுக் கொள்கை பொருளாதார சூழல் காரணியொன்றாகும்

(iv) அரசினால் அமுல்படுத்தப்படும் சட்ட திட்டங்களும், விதி முறைகளும் சட்டச் சூழலுக்குரிய காரணியாகும்

16. வணிகமொன்றினால் கட்டுப்படுத்தக் கூடிய சூழல் யாது?

(i) அகச் சூழல் (ii) வாடிக்கையாளர் (iii) ஊழியர் (iv) புறச்சூழல்

17. பின்வருவனவற்றுள் " உட் கட்டமைப்பு வசதிகளை வழங்கல் " என்பதுடன் தொடர்பற்ற நிகழ்வு எது?

(i) மத்திய அதிவேகப் பாதைக் கட்டமைப்பின் புதிய பாதைக்கான அடிக்கல் நடுதல்

(ii) ரஜரட்ட பின்தங்கிய பிரதேசத்திற்கு நீர் வழங்கல் முறையொன்றை ஆரம்பித்தல்.

(iii) பேரே வாவியின் நீர் வழியினூடாக புதிய படகு போக்குவரத்து சேவையொன்று அறிமுகப்படுத்தப்படல்

(iv) தபால் சேவையில் டெலிகிராம் வசதிக்கு பதிலாக டெலிமெயில் (Telemail) வசதி அறிமுகப்படுத்தப்படல

18. பின்வரும் சூழல் காரணிகளுள் புறச் சூழல் காரணியொன்றாக அமைவது,

(i) முகாமையாளர் (ii) உரிமையாளர் (iii) தொழினுட்பச் சூழல் (iv) ஊழியர்


kalvi.lk

19. இலங்கை மத்திய வங்கியினால் வங்கி வைப்புகளுக்கான வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது
(i) தொழிநுட்பச் சூழலில் உள்ளடங்கும் (ii) பொருளாதார சூழலில் உள்ளடங்கும்
(iii) சட்டச் சூழலில் உள்ளடங்கும் (iv) அரசியல் சூழலில் உள்ளடங்கும்

20. பின்வருவனவற்றுள் தொழிநுட்பச் சூழல் காரணியாக அமையாதது
(i) எளிய கை இயந்திரங்களுகளுப் பதிலாக நவீன இயந்திர உபகரணங்கள் பயன்படுத்துதல்
(ii) சாதாரண தபாலுக்கு பதிலாக மின்னஞ்சல் பயன்படுத்தப்படல்
(iii) கணக்குப் புத்தகங்களில் பதிவதற்காக கணினி தொடர்பாடல் முறையினைப் பயன்படுத்துதல்.
(iv) அரசினால் சாதாரண பாதைகளுக்கு பதிலாக அதிவேகப் பாதைகள் அமைக்கப்படல்

21. தொழினுட்ப சூழல் எனப்படுவது
(i) நவீன தொழினுட்ப உபகரணங்களின் பாவனை ஆகும்
(ii) நவீன இயந்திர முறையின் பாவனை ஆகும்.
(iii) நவீன முறைகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் ஆகும்
(iv) மேலுள்ள அனைத்தும்

22. வருமானப் பரம்பல் பொருளாதார சூழல் காரணியொன்றாகும். அதனடிப்படையில் வருமானப்பரம்பல் எனப்படுவது.
(i) நாடொன்றின் தேசிய வருமானமானது மக்களிடையே பகிரப்பட்டுள்ள விதமாகும்
(ii) வருமானம் பங்கிடப்பட்டுள்ள விதம்
(iii) ஒவ்வொரு தனிநபரும் வருமானம் ஈட்டும் வழிமுறையாகும்.
(iv) தனிநபர் வருமானம் பங்கிடப்பட்டுள்ள விதமாகும்

23. பூகோளமயமாதலினால் உலக நாடுகளுக்கிடையிலான வியாபார நடவடிக்கைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன. பூகோளமயமாதல் எனப்படுவது,
(i) தேச வரையறை மற்றும் ஏனைய தடைகளை நீக்குதல்
(ii) தொடர்பாடல் தொழினுட்ப வளர்ச்சி
(iii) நாடுகளுக்கிடையிலான பொருளாதார, சமூக மற்றும் கலாசார தொடர்பு
(iv) உலகம் கோள வடிவமாதல்

24. பூகோளமயமாதலினால் உள்நாட்டு வணிக நடவடிக்கைளில் ஏற்பட்டுள்ள சாதகமான தாக்கம்
(i) உள்நாட்டு பயிற்றப்பட்ட ஊழியம் வெளிநாட்டுக்கு நகர்தல்
(ii) கடும் போட்டி நிலைமைக்கு முகங்கொடுத்தல்
(iii) வெளிநாட்டு மூலதனம் நாட்டினுள் உட்பாய்ச்சப்படல்
(iv) உள்நாட்டு கலாசார சீர்கேடு

25. பூகோளமயமாதலினால் உள்நாட்டு வணிக நடவடிக்கைளில் ஏற்பட்டுள்ள பாதக விளைவு
(i) உள்நாட்டு வணிகங்களின் நீடித்த வாழ்வின்மை.
(ii) உள்நாட்டு பொருட்கள், சேவைகளுக்கு சர்வதேச சந்தைகளை பெற்றுக் கொள்ள முடிதல்.
(iii) வினைத்திறன் மிக்க இயந்திர உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
(iv) தரமான வெளிநாட்டு மூலப்பொருட்களை பெற முடிதல்.

NWP EXAM

26. பின்வருவனவற்றுள் சரியான கூற்றுக்கள் எவை?

A - சர்வதேச தொழில்நுட்பம் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டமையால் உள்நாட்டு வணிகங்கள் வளர்ச்சியடைந்துள்ளன.

B - பூகோளமயமாதலினால் உலகமானது பூகோள கிராமமாக மாறியுள்ளது

C - தகவல் தொடர்பாடல் தொழினுட்ப மாற்றம் எப்போதும் வணிகங்களுக்கு சாதகமாக அமையும்

D - பூகோளமயமாதலினால் மனிதர்களுக்கிடையிலான தூரம் அதிகரித்துள்ளது.

(i) B, C மாத்திரம் (ii) A, B மாத்திரம்
(iii) A, D மாத்திரம் (iv) C,D மாத்திரம்

திரு. ஜயசிங்க என்பவர் தனது பிரதேசத்ததிலுள்ள நெல்லை கொள்வனவு செய்து அரிசியாக மாற்றி விற்பனை செய்யும் வணிகமொன்றை ஆரப்பித்தார். இவ் வணிகத்தில் தனது நண்பரான திரு. குலசிங்க என்பவரை ஊழியராக சேர்த்துக் கொண்டார். திரு ஜயசிங்க அவர்கள் தனது வணிகத்திற்கு ' சிங்க மில்ஸ் " எனப் பெயரிட்டார்.

27. " சிங்க மில்ஸ் " எவ்வகை வணிக அமைப்பாகும்.

(i) தனியுடைமை வணிகம் (ii) பங்குடைமை வணிகம்
(iii) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி (iv) கூட்டுறவுச் சங்கம்

28. மேற்படி வணிகம் தொடர்பில் பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?

(i) அரசினால் கட்டுப்படுத்தப்படல் (ii) நீடித்த வாழ்வு காணப்படல்
(iii) பதிவு செய்தல் கட்டாயமானது (iv) சட்ட ஆளுமை கொண்டது

29. வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் அடிப்படையாக அமையாதது.

(i) உரிமை அடிப்படையில் (ii) சட்ட ஆளுமை அடிப்படையில்
(iii) நோக்கத்தின் அடிப்படையில் (iv) பருமன் அடிப்படையில்

30. சட்ட ஆளுமையற்ற வணிக அமைப்பு பின்வருவனவற்றுள் எது?

(i) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்
(ii) இலங்கை புகையிரத திணைக்களம்
(iii) இலங்கை துறைமுக அதிகார சபை
(iv) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

31. தனியுடைமை வணிக அமைப்பின் அனுகூலம் ஒன்று,

(i) ஆரம்பித்தல் சிக்கலானது (ii) அதிக மூலதனத்தை திரட்ட முடிதல்
(iii) சுதந்திரமாக தீர்மானமெடுக்க முடிதல் (iv) சட்ட ஆளுமை காணப்படல்

32. அரச கூட்டுத்தாபனங்கள் தொடர்பான சரியான கூற்று எது?

(i) கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுதல்
(ii) சட்ட ஆளுமையற்றது
(iii) சுதந்திரமாக தீரமானமெடுக்க முடிதல்
(iv) பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படுதல்

33. இலாப நோக்கம் கொண்ட வணிக அமைப்பு

(i) கூட்டுறவுச் சங்கம் (ii) அரச திணைக்களம்
(iii) அரச கம்பனி (iv) விளையாட்டுக் கழகம்

34. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக்கு உதாரணமாக அமைவது,

(i) சமித் பெரேரா வணிகம் (ii) சில்வா என்ட் கம்பனி

(iii) வரையறுத்த ரன்(தனியார்) கம்பனி (iv) இலங்கை மின்சார சபை

35. தற்காலத்தில் பெரும்பான்மையானோர் சிற்றளவு வணிகங்களை தெரிவு செய்வதற்கான காரணமாகக் குறிப்பிடமுடியாதது

(i) குறைந்தளவு மூலதனத்துடன் ஆரம்பிக்க முடிதல்

(ii) குறைந்த சட்டக்கட்டுப்பாட்டின் கீழ் ஆரம்பிக்க முடிதல்

(iii) குறித்த கைத்தொழினுள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த முடிதல்

(iv) தனது திறமையினை உச்ச அளவில் பயன்படுத்த முடிதல்

36. கூட்டுறவுச் சங்கமொன்றில் காணக்கூடிய பண்பொன்றாக அமையாதது,

(i) ஜனநாயக நிர்வாகம்

(ii) பங்காளர்களின் சம உரிமை

(iii) தனிப்பட்ட நோக்கத்தை கொண்டிருத்தல்

(iv) சுதந்திரமான திறந்த அங்கத்துவம்

37. தில்கி வணிகமானது உச்ச இலாபத்தை உழைக்கும் நோக்கத்துடன் நடாத்தப்படும் வணிகமாகும். அதனடிப்படையில் இலாப நோக்கற்ற வணிக அமைப்பாக செயல்படும் வணிகம் பின்வருவனவற்றுள் எது?

(i) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி (ii) பங்குடைமை வணிகம்

(iii) அரச கம்பனி (iv) கூட்டுறவுச் சங்கம்

38. தனுஷ் என்பவர் வணிகமொன்றை ஆரம்பிக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் தொடர்பில் ஆராய்கிறார். அவற்றுள் வணிகமொன்றின் பருமன் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் போது கவனிக்க வேண்டிய காரணிகளை உள்ளடக்கிய தொகுதி

(i) உரிமையாளரின் நிதி பலம், திறமை, தொடர்புகள், அனுபவம்.

(ii) உரிமையாளரின் நிதி பலம், ஊழியர் அளவு, உற்பத்தி பொருள், தொடர்புகள்

(iii) உற்பத்தி பொருள் மற்றும் சேவையின் அளவு, சந்தைப் பங்கு, திறமை, அனுபவம்

(iv) உற்பத்திப் பொருள் மற்றும் சேவையின் அளவு, உரிமையாளரின் நிதி பலம், சந்தைப் பங்கு, திறமை.

39. தெனுஷி என்பவர் “ தெனுஷி டெக்ஸ்டைல்ஸ்” எனும் பெயரில் வணிகமொன்றை நடாத்தி வருவதுடன் அவ் வணிகத்தின் பெயரை பதிவு செய்வதற்கான பதிவுக்கட்டணத்தை தீர்மானிப்பதற்கு அதிகாரம் கொண்ட நபர் யார் என உம்மிடம் விசாரிக்கிறார். அதனடிப்படையில் அவருக்கு வழங்கக் கூடிய சரியான பதில்

(i) குறித்த பிரதேச செயலாளர் காரியாலயத்தின் செயலாளர்

(ii) குறித்த கிராம சேவகர் பிரிவின் கிராம சேவகர்

(iii) குறித்த மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியாகும்.

(iv) குறித்த மாகாண சபையின் வணிகப் பெயர்ப் பதிவாளராகும்.

40. சுபுன் என்பவர் “ சுபுன் ஸ்டோர்ஸ் ” எனும் பெயரில் வணிகப் பெயரைப் பதிவு செய்து வணிகமொன்றை நடாத்தி வருகிறார். இவ் வணிகத்தின் பெயரை பதிவு செய்திருப்பதனால் பெறக் கூடிய அனுகூலம் அல்லாதது

(i) சட்ட ஆளுமை கிடைத்தல்

(ii) வணிகப் பெயருக்கான உரிமை கிடைத்தல்

(iii) அரச மானியங்களை பெற்றுக் கொள்ள முடிதல்

(iv) கடன் வசதிகளை பெறுவது இலகுவானது.

( 1 x 40 = 40 புள்ளிகள்)


kalvi.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

60 T II

## முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020
## First Term Test - Grade 10 - 2020

பெயர் :......................................      வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் II

**கவனிக்க**

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. **பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

தருஷன் என்பவர் விஞ்ஞான துறையில் க.பொ.த (உயர்தர) கல்வியை கற்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவராவார். அவர் தான் கற்ற அறிவைக் கொண்டு மின்சக்தியை வினைத்திறனாக பயன்படுத்தக் கூடிய முறையில் “ லைட் LED ” மின்குமிழ்களை உற்பத்தி செய்ய திட்டமிட்டார். தனது தந்தையிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்றுக் கொண்ட ரூ. 100 000 பணத்தையும், சிறு கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் வணிக வங்கியினால் வழங்கப்பட்ட ரூ. 100 000 வங்கிக் கடனையும் கொண்டு வணிகமொன்றை ஆரம்பித்தார். மேலும் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக தான் வசிக்கும் வீட்டிற்கு அருகாமையில் உள்ள பயன்படுத்தப்படாத சிறிய கட்டடத்தைப் பயன்படுத்தினார். LED மின்குமிழ்களை விற்பனை செய்வதற்காக தனது தந்தையின் சிறிய லொறியை வாடகையின்றி பயன்படுத்துவதற்காகப் பெறறுக் கொண்டார்.

(i) அ) தருஷன் வணிகத்தின் பிரதான நோக்கம் என்ன?

ஆ) உற்பத்தியின் தன்மை அடிப்படையில் தருஷன் வணிகம் எவ் வணிக அமைப்பைச் சார்ந்தது?

(ii) பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்தக.

| பொருள் | வியாபார சின்ன. பெயர் | தெரிவு செய்தமைக்கான காரணம் |
|---|---|---|
| மின்குமிழ் | | |

(iii) நிகழ்வில் குறிப்பிட்டுள்ள வணிகத்தின் மூலதனமாக இனங்காணக் கூடிய இரு விடயங்களை குறிப்பிடுக.

(iv) தருஷன் வணிகத்திற்கு அரசினால் வழங்கப்படும் பங்களிப்பு யாது?

(v) LED மின்குமிழ்களை நவீன மாதிரிகளில் உற்பத்தி செய்தலானது உள்ளடக்கும் வணிகச் சூழல் யாது?

(vi) அ) மேலே வணிகத்தில் காணப்படும் பலம் மற்றும் வாய்ப்பு ஒவ்வொன்று வீதம் தருக.

ஆ) அவை எவ் வணிகச் சூழலுக்கு உட்பட்டது?

(vii) அ) நோக்கத்தின் அடிப்படையில் தருஷன் வணிகம் எவ் வணிக அமைப்பைச் சார்ந்தது?

ஆ) இவ் வணிகம் பருமன் அடிப்படையில் எவ்வகையைச் சார்ந்தது?

(viii) அ) தருஷன் தனது வணிகத்திற்கு வாடிக்கையாளர்களை கவரும் வகையில் பெயரொன்றை வைக்க எதிர்பார்க்கிறார். இவ்வணிகத்திற்கு பொருத்தமான பெயரை இடுக.

ஆ) இவ் வணிகத்தின் பெயரைப் பதிவு செய்ய வேண்டுமாயின் பிரதேச செயலாளர் காரியாலயத்திலிருந்து பெற வேண்டிய இரு விண்ணப்பப்படிவங்களை தருக.

(ix) வினா (viii) இல் அ) பகுதியில் குறிப்பிடப்பட்ட வணிகப் பெயரை பதிவு செய்வதனால் கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் 2 ஐக் குறிப்பிடுக.

(x) தருஷன் வணிகத்தை அபிவிருத்தி செய்வதற்காக கடன் வசதிகளை பெற்றுக் கொள்ளக் கூடிய இரு நிறுவனங்களை குறிப்பிடுக.

02. (i) வணிகமொன்றின் பிரதான நோக்கங்கள் 2 ஐ குறிப்பிடுக.

(ii) வருடாந்த இல்ல விளையாட்டு போட்டியில் 100 M குறுந்தூர ஓட்டப் போட்டியில் கலந்துக் கொண்ட அமாலி எனும் மாணவி போட்டியின் போது மயங்கி விழுந்தார். பின்னர் உடனடியாக இல்லப் பொறுப்பாசிரியர் மூலமாக அவருக்கு முதலுதவி வழங்கப்பட்டது.
மேற்படி சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவை மற்றும் விருப்பங்களை குறிப்பிடுக.

(iii) தேவை மற்றும் விருப்பங்களுக்கிடையான வேறுபாடுகள் 2 ஐக் குறிப்பிடுக.

(iv) பின்வருவன உண்மை அல்லது பொய் என குறிப்பிடுக.

அ) உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்ற மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் மூலதனம் எனப்படும்

ஆ) கணக்காளரினால் மேற்கொள்ளப்படும் பணிகள் உழைப்பு எனும் உற்பத்திக் காரணியினுள் உள்ளடங்கும்

இ) வணிகத்திற்கு வளங்களை வழங்கிய நபர்கள் உரிமையாளர் ஆவர்

ஈ) பொருட்களை சந்தைப்படுத்தும் போது வாடிக்கையாளரின் சுவை பற்றி கவனிக்க வேண்டியதில்லை

(v) தரிந்து மற்றும் சுபுன் ஆகியோர் இணைந்து TS Book Shop எனும் பெயரில் எழுதுகருவி விற்பனை வணிகமொன்றை பாடசாலைக்கு அருகில் ஆரம்பித்தனர்.
TS Book Shop வணிகம் மீது அக்கறை காட்டும் இரு தரப்பினர்களை குறிப்பிடுக.

03. (i) அ) அரசினால் வணிகங்கள் மீது விதிக்கப்படும் சட்டதிட்டங்களை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அரச நிறுவனங்கள் 2 ஐக் குறிப்பிடுக.

ஆ) அகச்சூழல் காரணியொன்றான முகாமையாளர் பற்றி விளக்குக.

(ii) பின்வருவன உண்மை அல்லது பொய் எனக் குறிப்பிடுக.

அ) வணிகமொன்றின் உரிமையாளர் அகச் சூழல் காரணி ஆவதுடன் வாடிக்கையாளர்கள் புறச் சூழல் காரணியாகும்.

ஆ) வருமானப் பரம்பல் அரசியல் சூழல் காரணியொன்றாகும்

இ) வணிக செயற்பாடுகள் தொடர்பான தீர்மானங்கள் உரிமையாளர்களினாலேயே மேற்கொள்ளப்படும்

ஈ) கம்பனிப் பதிவாளர் என்பவர் அரச சட்ட திட்டங்கள் விதிமுறைகளை செயற்படுத்தும் அரச அதிகாரியாவார்

(iii) ஹிக்கடுவ பிரதேசத்தில் வசிக்கும் சமல் என்பவர் அங்கு காணப்படும் கடல் சிப்பிகள் போன்ற இயற்கை மூலப்பொருட்களை கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடாத்தி வருகிறார். இவ் வணிகத்தின் காசாளராக ரஞ்சித் என்பவர் பணி புரிகிறார்.

அ) மேற்படி வணிகத்துடன் தொடர்புடைய அகச் சூழல் காரணிகள் 2 ஐக் குறிப்பிடுக.

ஆ) சமலின் வணிகத்திற்கு அவசியமான கடல் சிப்பிகளை வழங்கல் செய்யும் அபிஷேக் என்பவர் எவ் வணிகச் சூழல் காரணியாகும்?

(iv) தொழினுட்ப மாற்றம் காரணமாக வணிகங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 2 ஐக் குறிப்பிடுக.

(v) பொருளாதாரச் சூழல் காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்று பற்றி விளக்குக.

04. (i) அ) தனியுடைமை வணிகம் என்றால் என்ன?

ஆ) இவ் வகை வணிக அமைப்புக்களின் பிரதிகூலமொன்றைக் குறிப்பிடுக.

(ii) பின்வருவன உண்மை அல்லது பொய் எனக் குறிப்பிடுக.

அ) பங்குடைமை வணிகத்தைப் பதிவு செய்தல் கட்டாயமானது

ஆ) பங்குடைமை வணிகமொன்றின் ஆகக் குறைந்த பங்காளர்களின் எண்ணிக்கை 2 ஆவதுடன் உச்ச பங்காளர் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை.

இ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் மீது 2007 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டம் தாக்கம் செலுத்துகிறது

ஈ) அரச கூட்டுதாபனங்களைப் பதிவு செய்வது கட்டாயமானதாகும்


kalvi.lk

(iii) உரிமையாண்மை அடிப்படையில் வணிக அமைப்புக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ள விதத்தினை கீழேயுள்ள பாய்ச்சல் கோட்டு வரைபடம் காட்டுகிறது. அதன் இடைவெளிகளை நிரப்புக.

வணிக அமைப்புக்கள்

| | |
|---|---|
| அ)................................ | அரச (பொது) துறை |
| தனியுடைமை வணிகம் | அரச திணைக்களம் |
| பங்குடைமை வணிகம் | அரச கூட்டுத்தாபனம் |
| கூட்டுறவுச் சங்கம் | ஆ) ........................ |

(iv) பங்குடைமை ஒப்பந்தம் மற்றும் பங்குடைமைச்சான்றிதழ் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக.

(v) ஏனைய வணிக அமைப்புக்களுடன் ஒப்பிடும் போது கூட்டுறவு சங்கங்களில் காணப்படும் அனுகூலங்கள் 2 ஐக் குறிப்பிடுக.

05. வணிகத்துறை விரிவடைந்தமை காரணமாக முயற்சியாளர்கள் பொருத்தமான வணிக அமைப்பொன்றைத் தெரிவு செய்யும் போது பல்வேறு விடயங்கள் மீது கவனம் செலுத்த வேண்டும்

(i) பருமன் அடிப்படையில் வணிக அமைப்பொன்றைத் தெரிவு செய்யும்போது அதில் இனங்காணக்கூடிய இரு வகைகளைக் குறிப்பிடுக.

(ii) பின்வருவன உண்மை அல்லது பொய் எனக் குறிப்பிடுக.

அ) சமூக நல நோக்கம் கொண்ட வணிக அமைப்புக்கள் அரசினால் மாத்திரமே நடாத்தப்படுகின்றன.

ஆ) அரச திணைக்களங்கள் இலாப நோக்கம் கொண்ட வணிக அமைப்பாகும்

இ) வணிகர்களின் நோக்கம் எதுவாக இருப்பினும் அவர்கள் தனியார் துறை வணிகங்களையே தெரிவு செய்ய வேண்டும்.

ஈ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் பங்கு வழங்களினூடாக மூலதனத்தை திரட்டுகின்றன.

(iii) அ) சிற்றளவு, நடுத்தரளவு, மற்றும் பாரியளவு வணிகங்களை வகைப்படுத்தப்படும் போது கருத்திற்கொள்ளப்படும் நியதிகள் 2 ஐக் குறிப்பிடுக.

ஆ) தனியுடைமை வணிகமொன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தினை எத்தனை நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

(iv) D,A பெரேரா என்பவரினால் ஆரம்பிக்கப்பட்ட வணிகமொன்று அவரது பெயரிலேயே நடாத்திச் செல்லப்படுகிறது.

அ) இவ் வணிகத்தைப் பதிவு செய்ய வேண்டுமா? இல்லையா? எனக் குறிப்பிடுக.

ஆ) உமது விடைக்கான காரணத்தைத் தருக.

(v) பல நபர்களைக் கொண்டு வணிகத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பின் தெரிவு செய்யக் கூடிய வணிக அமைப்புக்கள் 2 ஐக் குறிப்பிடுக.

NWP EXAM

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

வயம்ப பළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

## முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020
## First Term Test - Grade 10 - 2020

### வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - விடைப்பத்திரம்

பகுதி I

| | | | |
|---|---|---|---|
| (1) | (11) | (21) | (31) |
| (2) | (12) | (22) | (32) |
| (3) | (13) | (23) | (33) |
| (4) | (14) | (24) | (34) |
| (5) | (15) | (25) | (35) |
| (6) | (16) | (26) | (36) |
| (7) | (17) | (27) | (37) |
| (8) | (18) | (28) | (38) |
| (9) | (19) | (29) | (39) |
| (10) | (20) | (30) | (40) |

( 1 x 40 = 40 புள்ளிகள்)

பகுதி II

(1) (i) a) இலாப நோக்கம் b) உற்பத்தி வணிகம்

(ii) a) LED மின்குமிழ் b) மின்சக்தி குறைவாக நுகரப்படுவதால்

(iii) காசு, கட்டடம், லொறி

(vi) வணிகங்களை ஊக்குவிப்பதற்காக மானியங்களை வழங்கல்

(v) தொழினுட்பச் சூழல்

(vi) a) பலம் : LED மின்குமிழ் தொடர்பான அறிவு/ நிதி பலம்

வாய்ப்பு : அரச அனுசரணை/ வங்கியினால் வழங்கப்படும் கடன் வசதி

b) பலம் : அகச் சூழல் வாய்ப்பு : புறச் சூழல்

(vii) a) இலாப நோக்கம் b) சிற்றளவு வணிகம்

(viii) a) உரிமையாளரின் முழுப்பெயரிலன்றி ஏதேனும் கவர்ச்சிகரமான பெயரிற்கு புள்ளி வழங்குக.

b) வணிகப் பெயரை பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

கிராம உத்தியோகத்தரின் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம்

(ix) தனித்துவம் கிடைத்தல்/ வணிகப் பெயருக்கான உரிமை/ அரச மானியங்கள்/ கடன் வசதிகளை பெறுவது இலகு.

(x) வணிக வங்கி/ கூட்டுறவு கடன் வழங்கல் சங்கம்/ கிராமிய வங்கி

( 2 x 10 = 20 புள்ளிகள்)

02 (i) இலாபம் உழைத்தல்/ வாடிக்கையாளரின் திருப்தியை உச்சப்படுத்தல்

(ii) சுகாதாரம் - தேவை

முதலுதவி - விருப்பம்

(iii) தேவை | விருப்பம்

| தேவை | விருப்பம் |
|---|---|
| அத்தியவசியமானது | அத்தியவசியமற்றது |
| பொதுவானது | வேறுபட்டது |
| தோற்றுவிக்க முடியாதது | தோற்றுவிக்கக்கூடிய |
| வரையறுக்கப்பட்டது | வரையறையற்றது |

(iv) அ) உண்மை ஆ) உண்மை இ) உண்மை ஈ) பொய்

(v) பாடசாலை மாணவர்கள்/ தரிந்து, சுபுன் (உரிமையாளர்)

03. (i) அ) பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை/ மத்திய சுற்றாடல் அதிகார சபை

ஆ) வணிகத்தின் உரிமையாளர்களின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்காக வணிக வளங்களை செயற்படுத்துவதற்கு அவசியமான தீர்மானங்களை மேற்கொள்ளும் நபர் முகாமையாளர் ஆவார்.

(ii) அ) உண்மை ஆ) பொய் இ) பொய் ஈ) உண்மை

(iii) அ) உரிமையாளர் - சமல் ஊழியர் - ரஞ்சித் ஆ) புறச் சூழல்

(iv) அ) உலக நாடுகளுக்கிடையிலான பொருளாதார, சமூக, மற்றும் கலாசார அடிப்படையிலான பிணைப்பு

ஆ) சாதாரண தபாலுக்கு பதிலாக மின்னஞ்சல் (E- Mail) பயன்பாடு.

கையிலான இயந்திரங்களுக்கு பதிலாக நவீன தன்னியக்க இயந்திர பயன்பாடு

தகவல் தொழினுட்ப வளர்ச்சி. பொன்ற விடைகள்

(v) வட்டி வீதம்/ நிறைதொழில் மட்டம்/ வருமானப் பரம்பல்/ சர்வதேச தொடர்ப்பு/ நாணயமாற்று வீதம்

04. (i) அ) வணிகத்தின் உரிமையாண்மை தனிநபரைச் சார்ந்த வணிகங்கள்

ஆ) ஆரம்பித்தல் இலகு/ சுதந்திர நிர்வாகம்/ இலாபம் முழுதும் உரிமையாளருக்குரியது/ வணிக இரகசியம் பேணப்படல்

(ii) அ) உண்மை ஆ) பொய் இ) பொய் ஈ) உண்மை

(iii) அ) தனியார்துறை ஆ) அரச கம்பனி

(iv) பங்காளர்களுக்கிடையிலான இணக்கப்பாடு ஒப்பந்தம் எனப்படும். இவ் இணக்கப்பாட்டினை எழுத்துரு வடிவில் பேணல் பங்குடைமைச்சான்றிதழ் எனப்படும்.

(v) ஜனநாயக நிர்வாகம், பங்காளர் நலனுக்காக செயற்படல், அரச அங்கீகாரம் பொருளாதார நலன்கள் பங்காளரிடையே பகிரப்படல் (10 புள்ளிகள்)

05 (i) சிற்றளவு வணிகம்/ பேரளவு வணிகம்

(ii) அ) பொய் ஆ) பொய் இ) உண்மை ஈ) உண்மை

(iii) அ) மூலதன அளவு/ ஊழியர் எண்ணிக்கை/ நுகரப்படும் மின்சக்தியின் அளவு/ சந்தைப் பங்கின் பருமன்

ஆ) 14 நாட்களினுள்

(iv) அ) கட்டாயமானது

ஆ) வணிகமானது உரிமையாளரின் முழுப் பெயரிலேயே நடாத்தப்படுவதால்

(v) பங்குடைமை வணிகம்

கூட்டிணைக்கப்பட்ட கம்பனி


kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page